# டிசம்பர் – 10 –திருவருகைக்கால 02ம் ஞாயிறு

"பாவமன்னிப்பு அடைய மனம்மாறித் திருமுழுக்குப் பெறுங்கள்" (மாற்.1:4)

## முதல் வாசகம் : ஏசாயா 40 : 1 – 5, 9 – 11

"ஆறுதல் கூறுங்கள் என் மக்களுக்குக் கனிமொழி கூறுங்கள்" என்கிறார் உங்கள் கடவுள். எருசலேமிடம் இனிமையாய்ப் பேசி, உரத்த குரலில் அவளுக்குச் சொல்லுங்கள் அவள் போராட்டம் நின்றுவிட்டது அவள் குற்றம் மன்னிக்கப்பட்டது அவள் தன் பாவங்கள் அனைத்திற்காகவும் ஆண்டவர் கையில் இருமடங்கு தண்டனை பெற்றுவிட்டாள். குரலொளி ஒன்று முழங்குகின்றது பாலைநிலத்தில் ஆண்டவருக்காக வழியை ஆயத்தமாக்குங்கள் பாழ்நிலத்தில் நம் கடவுளுக்காக நெடுஞ்சாலை ஒன்றைச் சீராக்குங்கள். பள்ளத்தாக்கு எல்லாம் நிரப்பப்படும் மலை, குன்று யாவும் தாழ்த்தப்படும் கோணலானது நேராக்கப்படும் கரடு முரடானவை சமதளமாக்கப்படும். ஆண்டவரின் மாட்சி வெளிப்படுத்தப்படும் மானிடர் அனைவரும் ஒருங்கே இதைக் காண்பர் ஆண்டவர்தாமே இதை மொழிந்தார். சீயோனே! நற்செய்தி தருபவளே, உயர்மலைமேல் நின்றுகொள்! எருசலேமே! நற்செய்தி உரைப்பவரே! உன் குரலை எழுப்பு, அஞ்சாதே! "இதோ உன் கடவுள்" என்று யூதா நகர்களிடம் முழங்கு! இதோ என் தலைவராகிய ஆண்டவர் ஆற்றலுடன் வருகின்றார் அவர் ஆற்றலோடு ஆட்சி புரிய இருக்கிறார். அவர்தம் வெற்றிப் பரிசைத் தம்முடன் எடுத்து வருகின்றார் அவர் வென்றவை அவர்முன் செல்கின்றன. ஆயனைப்போல் தம்மந்தையை அவர் மேய்ப்பார் ஆட்டுக்குட்டிகளைத் தம் கையால் ஒன்று சேர்ப்பார் அவற்றைத் தம் தோளில் தூக்கிச் சுமப்பார் சினையாடுகளைக் கவனத்துடன் நடத்திச் செல்வார்."

**பதில்பாடல் :** ஆண்டவரே உமது பேரன்பைக் காட்டி எங்களை மீட்டருளும்.

## இரண்டாம் வாசகம் : 2 பேதுரு 3 : 8 -14

அன்பார்ந்தவர்களே, நீங்கள் ஒன்றை மறந்துவிடவேண்டாம். ஆண்டவரின் பார்வையில் ஒருநாள் ஆயிரம் ஆண்டுகள் போலவும், ஆயிரம் ஆண்டுகள் ஒருநாள் போலவும் இருக்கின்றன. ஆண்டவர் தம் வாக்குறுதியை நிறைவேற்றக் காலந்தாழ்த்துவதாகச் சிலர் கருதுகின்றனர். ஆனால், அவர் அவ்வாறு காலந்தாழ்த்துவதில்லை. மாறாக, உங்களுக்காகப் பொறுமையோடிக்கிறார். யாரும் அழிந்து போகாமல், எல்லாரும் மனம் மாறவேண்டுமென விரும்புகிறார். ஆனால் ஆண்டவருடைய நாள் திருடனைப்போல வரும். வானங்கள் பெருமுழக்கத்துடன் மறைந்தொழியும் பஞ்சபூதங்கள் வெந்திருகிப் போகும். மண்ணுலகமும் அதன் செயல்களும் தீக்கிரையாகும். இவையாவும் அழிந்து போகுமாதலால் நீங்கள் தூய, இறைப்பற்றுள்ள நடத்தையில் மிகவும் சிறந்து விளங்க வேண்டும். கடவுளின் நாளை எதிர்பார்த்து அவர் வருகையை விரைவுபடுத்த வேண்டும். அந்நாளில் வானங்கள் எரிந்தழிந்து பஞ்சபூதங்கள் வெந்துருகிப் போகும். அவர் வாக்களித்தபடியே நீதி குடிகொண்டிருக்கும் புதிய விண்ணுலகும் புதிய மண்ணுலகும் வரும் என நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, அன்பார்ந்தவர்களே, இவற்றை எதிர்பார்த்திருக்கும் உங்களை அவர் மாசுமறுவற்றவர்களாய், நல்லுறவு கொண்டவர்களாய்க் காணும் வகையில் முழுமுயற்சி செய்யுங்கள்.

## நற்செய்தி : மாற்கு 1 : 1 - 8

கடவுளின் மகனாகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தியின் தொடக்கம். "இதோ, என் தூதனை உமக்கு முன் அனுப்புகிறேன். அவர் உமக்கு வழியை ஆயத்தம் செய்வார். பாலை நிலத்தில் குரல் ஒன்று முழங்குகிறது ஆண்டவருக்காக வழியை ஆயத்தமாக்குங்கள் அவருக்காகப் பாதையைச் செம்மையாக்குங்கள்" என்று இறைவாக்கினர் எசாயாவின் நூலில் எழுதப்பட்டுள்ளது. இதன்படியே திருமுழுக்கு யோவான் பாலை நிலத்துக்கு வந்து, பாவ மன்னிப்பு அடைய மனம் மாறித் திருமுழுக்குப் பெறுங்கள் என்று பறைசாற்றி வந்தார். யூதேயாவினர் அனைவரும் எருசலேம் நகரினர் யாவரும் அவரிடம் சென்றனர் தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு யோர்தான் ஆற்றில் அவரிடம் திருமுழுக்குப் பெற்று வந்தனர். யோவான் ஒட்டகமுடி ஆடையை அணிந்திருந்தார் தோல்கச்சையை இடையில் கட்டியிருந்தார் வெட்டுக்கிளியும் காட்டுத்தேனும் உண்டு வந்தார். அவர் தொடர்ந்து, "என்னைவிட வலிமை மிக்க ஒருவர் எனக்குப்பின் வருகிறார். குனிந்து அவருடைய மிதியடி வாரை அவிழ்க்கக் கூட எனக்குத் தகுதியில்லை. நான் உங்களுக்குத் தண்ணீரால் திருமுழுக்குக் கொடுத்தேன் அவரோ உங்களுக்குத் தூய ஆவியால் திருமுழுக்குக் கொடுப்பார்" எனப் பறைசாற்றினார்.

**தியானம்:** மனிதன் கடவுளை அன்பு செய்கின்றான் என்பதைவிட கடவுள் மனிதனை மிகவும் அன்பு செய்கின்றார் என்பதுதான் மீட்பு வரலாற்றின் தொடக்கம். பாவத்தால் ஆதிமனிதன் கடவுளைவிட்டுப் பிரிந்து மரங்களுக்கிடையே தன்னை மறைத்துக் கொண்டாலும் அன்பால் நிறைந்த கடவுள் மரங்களிடையே மறைந்திருக்கும் மனிதனை தேடி, ஆதாம் நீ எங்கே இருக்கின்றாய்? (தொ.நூ.3:9) என்று தொலைந்த மனிதனை கடவுள் முதலில் தேடுகின்றார். மனிதன் கடவுளைவிட்டுப் பிரிந்து செல்ல விரும்பினாலும் தாயன்புகொண்ட கடவுள் அவனைவிட்டுப் பிரிந்து செல்லாமல் அரவணைக்க விரும்புகின்றார் என்பதைத்தான் இன்றைய முதல் வாசகம் நமக்கு எடுத்துக்காட்டுகின்றது. மனித உள்ளத்திற்காக கடவுள் பேராவலோடு ஏங்குகின்றார் (யாக்.4:5). ஆனால் மனிதன் கடவுளுடைய அன்பை, இரக்கத்தை எளிதாக எடுத்துக்கொண்டு கடவுளைத் தொடர்ந்து உதாசீனப்படுத்திக் கொண்டே வருகின்றான். கடவுளின் பொறுமையை அவன் உணருவதில்லை. ஆனாலும் கடவுள் மிகுந்த பொறுமையோடு மனிதனின் மனந்திரும்புதலுக்காகக் காத்திருக்கின்றார். "நீர் எல்லாம் வல்லவராய் இருப்பதால் எல்லோர்மீதும் இரங்குகின்றீர். மனிதர்கள் தங்களுடைய பாவங்களைவிட்டு மனந்திரும்பும் பொருட்டே நீர் அவற்றைப் பார்த்தும் பாராமல் இருக்கின்றீர்." (சா.ஞா.11:23) "அவர் நம் பாவங்களுக்கு ஏற்ப நம்மை நடத்துவதில்லை நம் குற்றங்களுக்கு ஏற்ப நம்மைத் தண்டிப்பதில்லை" (திபா.101:10) கடவுளின் இந்தப் பொறுமையை உதாசீனப்படுத்திவிட்டு, இறுதித்தீர்ப்பின் போது நம்முடைய செயல்பாடுகளுக்காகத் தண்டிக்கப்படும்போது சாக்குப்போக்கு சொல்ல வழியில்லாமல் போகும். எனவே கடவுளின் கருணையை, இரக்கத்தை, மன்னிப்பை உணர்ந்தவர்களாக மனம் திரும்பி வாழ இன்றைய இரண்டாம் வாசகம் நமக்கு அழைப்பு விடுக்கின்றது. இயேசுவின் இரண்டாம் வருகைக்காக காத்திருக்கும் நமக்கு அது ஒரு திருடனைப்போல வந்துவிடாமல் இருக்கட்டும். இயேசுவின் இதய அன்பை உணர்ந்து அந்த இதயம் நமக்காக ஏங்கிக் கொண்டிருக்கின்றது என்பதைப் புரிந்து அவரை மட்டுமே அன்பு செய்து வாழ்வோம். "உலகின்மீதும் அதிலுள்ளவைமீதும் அன்பு செலுத்தாதீர்கள். அவ்வாறு அன்பு செலுத்துவோரிடம் தந்தையின்பால் அன்பு இராது." (1யோவா.2:15) இயேசுவின் அன்பிற்கு இணையாக இந்த உலகத்தில் எதுவும் இல்லை என்பதை அறிந்து அவரை மட்டுமே நம் முழு ஆற்றலோடும், முழு வலிமையோடும், முழு ஆன்மாவோடும் அன்பு செய்வோமாக! நமக்குள் மறைந்திருக்கும் இருளின் சக்திகளை, பாவ நாட்டங்களை, ஊனியில்புகளை, இறைவனின் ஒளி கொண்டு முறியடித்து இயேசுவின் பிறப்பிற்காய், இரண்டாம் வருகைக்காய் நம்மையே ஆயத்தம் செய்வோம்.